செ.கு.எண்:-262 நாள்:-24.07.2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.7.2012

ஈரோடு மாவட்டம், பூந்துறை உள்வட்டம், அவல்பூந்துறை கிராமம், கண்டிக்காட்டு வலசு எரப்பம்பாளையத்தைச் சேர்ந்த திரு. அங்கப்பன் என்பவரின் மகன் திரு.A. சதாசிவம், மின்சார வாரிய, மின் பாதை ஆய்வாளர், 21.7.2012 அன்று வெண்டிபாளையம் அருகே உள்ள குப்பைக்காடு என்ற பகுதியில் உள்ள மின்மாற்றியில் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

திரு. சதாசிவம் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்மாற்றியில் பராமரிப்பு பணியை மேற்கொண்டிருந்த போது காலமான மின்வாரிய, மின் பாதை ஆய்வாளர் திரு.சதாசிவம் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9